Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 238 | வெள்ளிக்கிழமை 22 ஜூலை 2022 | ஆடி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 8 + IV | விலை : ரூ. 50

## ஜனாதிபதியின் தலைமையில் சீர்திருத்தங்கள் முன்னெடுப்பு!

### மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 22
புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் 07

# புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு!

### பிரதமராகிறார் தினேஷ்? சஜித்துக்கும் அமைச்சு?

**கொழும்பு, ஜூலை 22**

**புதிய அமைச்சரவை இன்று காலை பிரதமர் அலுவலகத்தில் பதவியேற்கவுள்ளது. இந்த நிலையில், பிரதமராக தினேஷ் குணவர்தன பொறுப்பேற்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது.** 07

## நாடாளுமன்றக் கூட்டத்தொடரை நிறைவுசெய்ய ரணில் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 22
நாடாளுமன்ற கூட்டத் தொடரை நிறைவு செய்வதற்கு ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.
இது தொடர்பில் கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஆளுங்கட்சியின் பிரதான கொறடா பிரசன்ன ரணதுங்க 07

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடன்

## பாதுகாப்பு அமைச்சுக்கு ரணில் முதல் பயணம்!



கொழும்பு, ஜூலை 22
ரணில் விக்கிரமசிங்க நேற்றையதினம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும், அவர் பாதுகாப்பு அமைச்சுக்குதனது முதலாவது திணைக்கள எப் பயணத்தை மேற்கொண்டார்.
பாதுகாப்புச் செயலர் கமால் குண 07

## சந்தர்ப்பவாதிகளுக்கு அமைச்சு வேண்டாம்!

### ரணிலிடம் சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 22
அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்குஅமைச்சுப்பதவிகளை வழங்கவேண்டாம் என்று ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித்.
சஜித் பிரேமதாஸவுக்கும், ரணில் 07



விரிவு - பக். 02

இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார். (அ-ம)

டலஸின் தோல்வி எதிரொலி

## சஜித் அணிக்குள் கருத்துமுரண்பாடு!

### தனிவழி போகின்றார் மயந்த திஸாநாயக்க?

கொழும்பு, ஜூலை 22
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரித்த டலஸ் அழகப்பெரும தோல்வியடைந்ததையடுத்து, சஜித் அணிக்குள் முரண்பாடு அதிகரித்து 07

## பிற பிரதேச செயலர் பிரிவிலும் பொதுமக்கள் எரிபொருள் பெறலாம்!

### மாவட்டச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 22
தாம் வதியும் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் 07

## ரணிலுடைய செயற்பாடுகளை அவதானித்து முடிவெடுப்போம்

### கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளைக் கொஞ்சம் பொறுத்துப் பார்த்து அதன் அடிப் 07

## எரிவாயுப் பிரச்சினைக்கு ஜூலைக்குள் தீர்வு வரும்

### லிட்ரோ தலைவர் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 22
எரிவாயுப்பிரச்சினைக்கு இந்த மாதத்தின் இறுதிக்குள் தீர்வு காணப்படும் என்று லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-
எரிவாயுப்பிரச்சினைக்கு தீர்வொன்றை விரைந்து ஏற்படுத்தலாம் 07

## எரிபொருள் அட்டைக்கு பொதுமக்கள் வரவேற்பு

### மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22
பொதுமக்கள் பலரும் எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையின் நன்மைகளை வரவேற்றுள்ளனர். இந்த முறைமையின் ஊடாக சிரமம் இன்றிய எரிபொருள் கொள்வனவுக்கு வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் IV

'நோ டீல் கம'

## போராட்டக்களத்தை அகற்றத் தீர்மானம்!

கொழும்பு, ஜூலை 22
கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதியில் உள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள 'நோ டீல் கம' போராட்டக் களத்தை அகற்ற அரசாங்க எதிர்ப்பு 07

## தன்னிச்சையான செயற்பாடுகள் விபரீதத்தை ஏற்படுத்தியுள்ளன!

### டலஸை ஆதரித்தமை தொடர்பில் மாவை. சேனாதிராசா கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 22
எழுபது ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற ஒரு கட்சியாக நாம் இருக்கும்போது, தந்திரோபாயமற்ற பொறுப்பற்ற தன்னிச்சையான செயற்பாடுகள் தற்போது விபரீதத்தை ஏற்படுத்தியுள்ளன என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மஹிந்த, மைத்திரி முன்பாக

# 8ஆவது ஜனாதிபதியாக ரணில் சத்தியப்பிரமாணம்

*29ஆண்டுகளின் பின்னர் ஐ.தே.கவுக்கு கிடைத்த பதவி*

**கொழும்பு, ஜூலை 22**

**சிறிலங்காவின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யயப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, நேற்று பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.**

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது. முப்படைகளின் அணிவகுப்பு, சபாநாயகர், படைக்கலச் சேவிதர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்று அழைத்துச் சென்றனர். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

1982 ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன வெற்றி பெற்றார். 1988 ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணசிங்க பிரேமதாஸ வெற்றிபெற்று இரண்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

1993ஆம் ஆண்டு பிரேமதாஸ கொல்லப்பட்டபின்னர், அப்போது பிரதமராக இருந்த டி.பி.விஜயதுங்க நாடாளுமன்றம் ஊடாக வாக்கெடுப்பின்றி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பின்னர் 1994, 1999, 2005, 2010 ஆம் ஆண்டுகளில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்களே வெற்றி பெற்றனர். 2015 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றபோதும், அவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரே.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ச, மக்கள் எதிர்ப்பால் பதவி விலகினார். அதையடுத்து ரணில் விக்கிரமசிங்க 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நாட்டின் 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம்செய்துள்ளார். அதேவேளை, 29 ஆண்டுகளின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்தர்ப்பம் இதுவாகும். (எ-இ)

# அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு டொலர் இல்லை

*மத்திய வங்கி ஆளுநர் தகவல்*

கொழும்பு, ஜூலை 22

டிசெம்பர் மாதம் வரையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைக்காது. வெளிநாட்டுக் கையிருப்பு அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதிக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுக்கையிருப்பு அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதிக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நிதிக்கான குறுகிய கால நிதி மூலோபாய நடவடிக்கைகளைத் தயாரிப்பதே புதிய அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாகும்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கும் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை டிசெம்பர் மாதம் வரையில் காத்திருக்க வேண்டும். கடந்த அரசாங்கமும், நிர்வாகமும் செய்யாத கடன் மறுசீரமைப்பை நாம் ஆரம்பித்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் முதல் சுற்று உடன்படிக்கைகள் இந்த மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படும்.

அடுத்த சில வாரங்களில் இந்தியா மற்றும் சீனாவுடன் நிதி உதவிகளுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும். அவர்கள் ஆதரவை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். (எ-இ)

## ரணில் பதவியேற்பில் சதியா? சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 22

8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று உத்தியோகபூர்வமாக பதவியேற்ற நிலையில் பதவியேற்பில் சதி நடவடிக்கை இடம்பெற்றதா? என்பது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நாடாளுமன்ற பொலிஸார் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு நிகழ்வை நேரடி ஒளிபரப்பு செய்யும் பொறுப்பு சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆனால் பதவியேற்புக்கு சில நிமிடங்களுக்கு முன் நாடாளுமன்றில் மின்சாரம் தடை ஏற்பட்டு நேரடி ஒளிபரப்பில் தாமதம் நிகழ்ந்தது.

இந்த நிலையில் இதன் பின்னணியில் சதி வேலைகள் இருக்கின்றனவா என்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ச-இ)

## ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமனம்

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் 8ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்று பதவியேற்றார். அவரது பதவியேற்புக்குப் பின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமன் ஏக்கநாயக்க ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தபோது சமன் ஏக்கநாயக்க அவரது செயலாளராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## ரணிலின் பதவியேற்பில் பங்கேற்காத கூட்டமைப்பு

கொழும்பு, ஜூலை 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்பு நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று பங்கேற்கவில்லை.

பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அலுவலகத்தால் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் கூட்டமைப்பின் சார்பில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. (ஒ-5)

# நாடாளுமன்றத்தை தீவைத்து எரிக்கலாம்

*காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 22

நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு ஊடாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணிலை நாட்டின் ஜனாதிபதியாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களாணையைத் தொடர்ந்தும் நிராகரித்தால் நாடாளுமன்றத்தைத் தீயிட்டு எரிக்கும் நிலைமையே தோன்றும் என்று காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டு வருவோர் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள "கோத்தா ஹோ கமவில்" நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவிதுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

69 லட்சம் வாக்குகளுடன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்த கோத்தாபய ராஜபக்ச அதிகாலை இரகசியமாக மாலைதீவுக்குத் தப்பியோடுவதற்கு இந்தப் போராட்டமே காரணமாக அமைந்தது. மஹிந்த ராஜபக்சவைப் பதவியில் இருந்து நீக்குவதற்கும் இந்தப் போராட்டம் காரணமாயிருந்தது.

காலாவதியான பொதுஜன பெரமுனவின் வாக்குகளைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்துக்குள் நடந்த சதிகள் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவொரு மக்கள் ஆணையும் இல்லை. தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்த அவரை, ராஜபக்சக்கள் மக்கள் நலனுக்காகப் பிரதமராக்கவில்லை. மக்களாணை இல்லாத ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ள முடியாது. அச்சுறுத்துவதன் ஊடாக இந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்று ரணில் விக்கிரமசிங்க நினைக்கக்கூடாது. நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவால் தீர்வு கொண்டுவர முடியாது.

மத்திய வங்கிக் கொள்ளை, பட்டலந்த வதை முகாம் போன்ற சம்பவங்களுடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ள தொடர்பு இரகசியமானதல்ல. தற்போதைய நாடாளுமன்றம் மக்கள் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை. மக்களாணையை மீறிச் செயற்பட்டால் நாடாளுமன்றத்தை மக்கள் தீயிட்டு எரிக்கும் நிலை உருவாகும். மக்கள் விருப்பத்துக்கு மாறாக அமைக்கப்படும் அரசாங்கத்துக்கு என்ன நடக்கப்போகின்றது என்பது இன்னமும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தெளிவாகும் - என்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் நண்பராக எவ்வாறு இருக்க முடியும்?

## பதில் கேள்வி கேட்ட ரணில்



**கொழும்பு, ஜுலை 22**

**நான் எப்படி ராஜபக்சக்களின் நண்பனாக இருக்க முடியும்? நான் என்றுமே மக்களின் நண்பன். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் மாலை கொழும்பு கங்காராம விகாரைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது, பிரிட்டன் ஊடக நிறுவனத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர், மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். ராஜபக்ச ஆதரவாளரான நீங்கள் எப்படி அந்த மாற்றத்தை ஏற்படுத்துவீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குச் சற்றுச் சூடாகவே பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, நான் எப்படி ராஜபக்சக்களின் நண்பனாக இருக்க முடியும்? எனக்குத் தெரிந்த காலத்தில் இருந்தே அவர்களுக்கு எதிரானவன். இன்று வெளிநாட்டில் இருந்து வந்து ராஜபக்ச ஆதரவாளரா என்று என்னிடம் கேட்கிறீர்கள் என்று பதிலளித்தார்.

நீங்கள் ராஜபக்சக்களின் நண்பன் இல்லையா? என்று அந்த ஊடகவியலாளர் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவினார்.

நான் ராஜபக்சக்களின் நண்பன் அல்லன். நான் என்றுமே மக்களின் நண்பன். இன்னொன்றையும் கூறுகின்றேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து இதற்கு முன்னர் பணியாற்றியுள்ளேன். ஆனால் நான் அவருக்கு வாக்களித்ததில்லை. அவர் ஒரு கட்சி. நான் இன்னொரு கட்சி. நான் ராஜபக்சவுடன் இணைந்து செயற்படுகின்றேன் என்று கூறுவது நான் அவர்களுடைய நண்பன் என்று அர்த்தமல்ல. எனக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களை எனது கட்சியைப் பலப்படுத்துவதற்கான வாய்ப்புகளாக மட்டுமே பார்க்கின்றேன் என்று ரணில் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# ரூபவாஹினிக்குள் குழப்பம் விளைவித்தோரை கைதுசெய்க

## *சட்டமா அதிபர் திணைக்களம் பணிப்பு*

கொழும்பு, ஜுலை 22

இலங்கையின் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி தொலைக்காட்சி அலுவலகத்துக்குள் கடந்த 9 ஆம் திகதி நுழைந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போராட்டக்காரர்கள் இருவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யுமாறு பொலிஸ் தலையகத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமையவே வழக்குத் தொடரப்படவுள்ளது.

அதன்படி தொலைக்காட்சி வளாகத்துக்கு வலுக்கட்டாயமாக நுழைய முயன்ற நபர்களை காணொலி காட்சிகள் மூலம் அடையாளம் கண்டு கைது செய்யுறுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ச-இ)

# ரணிலுக்குக் கிடைத்த வெற்றி மக்கள் ஆணைக்கு எதிரானது

## *ஹிருணிகா தெரிவிப்பு*



கொழும்பு, ஜுலை 22

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி நாட்டு மக்களின் ஆணையைப் பிரதிபதிலிக்கவில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அவர் தனது பேஸ்புக் கணக்கில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் ராஜக்ச அவர்களே, உங்களின் வெற்றி நாடாளுமன்ற யதார்த்தத்தின் விசித்திரமான பிரதிநிதித்துவம் மட்டுமே. மக்களுடன் நின்று ஜனநாயகக் கொள்கைகளைக் கடைப்பிடியுங்கள் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

தயவு செய்து உரிமைகளுக்காகப் போராடும் மக்களின் கோரிக்கைகளை நசுக்காதீர்கள். மக்களின் குரலுக்குச் செவிசாய்த்து விரைவில் பொதுத் தேர்தலுக்குச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(எ-இ)



இரத்தினபுரி, எம்பிலிப்பிடியவில் உருவாக்கப்பட்டிருந்த போராட்டக்களமான கோத்தா ஹோ கம மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டுச் சிலமணி நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (எ-இ)

# சிலிண்டரை கொடுத்து சிலிர்க்க வைத்த ரணில்

கொழும்பு, ஜுலை 22

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதி தெரிவு வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான சுவாரசியத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

வாக்கெடுப்புக்கு முதல்நாள் மாலை மா[illegible]லவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் உள்ள வளாகத்தில் திடீரென எரிவாயு சிலிண்டர்களுடன் லொறி ஒன்று சென்றிருக்கின்றது. அங்கிருந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்டணத்துடன் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளில் இருந்தவர்களோ இன்ப அதிர்ச்சியில் சிலிர்த்துப் போயுள்ளனர்.

"கோத்தாபயவும் இருந்தாரே... எப்போதாவது இப்படிச் செய்தாரா?" என்று வீட்டில் இருந்தவர்கள் அங்கலாய்த்திருக்கின்றனர். "பேசாமல் ரணிலுக்கே சப்போர்ட் செய்யுங்கள். ஏதாவது நல்லது கிடைக்க வழி செய்யுங்கள்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளிலேயே ஒரே நச்சரிப்பாம். இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளில் ரணில் பெரும் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றாராம்.

அதேநேரம், "அக்டிங்" ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, இப்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டபோதும், இன்னமும் அவர் "அக்டிங்கை" விடவில்லை. இராணுவத் தரப்புகள் ராஜபக்சவின் பக்கம் என்ற பொதுவான கருத்து இருக்கும் நிலையில், நேற்றுமுன்தினம் தடாலடியாக ஒரு காரியத்தைச் செய்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற ரணில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறும் போது, திடீரென காரை விட்டு இறங்கி, அங்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினரைச் சந்தித்து சகஜமாகக் கலந்துரையாடியிருக்கிறார். அவர்களைப் பாராட்டி உச்சி குளிர வைத்துள்ளார். படையினரும் இப்போது ரணிலை ஆஹா, ஓஹோ என்று புகழ்கிறார்களாம். (எ-இ)

# போராட்டம் எனும் போர்வையில் ஜனநாயக விரோதச் செயல்கள்!

## *கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை*

கொழும்பு, ஜுலை 22

போராட்டம் என்ற போர்வையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முற்படுவதும், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் என்பவற்றைக் கைப்பற்றுவதும் ஜனநாயகம் கிடையாது. அது சட்டவிரோத நடவடிக்கையாகும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் இரவு கங்காராம விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

விகாரை வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய அரசியல் முறைமையை மாற்றி, அனைத்துக்கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் செயற்படவே எதிர்பார்க்கின்றேன், இளைஞர்களின் கருத்தும் இதுவாகவே உள்ளது. எதிர்ப்பு அரசியலை நடத்தினால் அது நாட்டுக்குதான் தீங்காக அமையும். அதேவேளை, தற்போதைய முறைமைக்கு (சிஸ்டம்) எதிராகவே போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எல்லாத் துறைகளிலும் மாற்றம் கோரப்படுகின்றது. அமைதியாக போராடுபவர்களுக்கு, அதற்கான பரப்புரைகளை [illegible] ளிக்கவேண்டும். [illegible] பவர்களின் யோசனைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவற்றுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்.

ஆனால் போராட்டம் என்ற போர்வையில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும், வீடுகளை எரிப்பதற்கும், ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் என்பவற்றை கைப்பற்றுவதற்கும் பெயர் ஜனநாயகம் அல்ல. அது சட்டவிரோத நடவடிக்கை. அவ்வாறு சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவை பெற்றவரைத்தான் பிரதமராக தெரிவுசெய்ய வேண்டும். எனது கட்சியில் நான் மட்டுமே உள்[illegible] நாடாளுமன்[illegible] எடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி விடுதலை!

கொழும்பு, ஜூலை 22

**2015ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதியான ராம் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

இவர் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிப்போரில் சரணடைந்த நிலையில் அவருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைப்பட்டார்.

பின்னர் 2015ஆம் ஆண்டு ரணில் ஆட்சியின்போது சாவகச்சேரி பிரதேசத்தில் தற்கொலைக் குண்டு அங்கி மீட்கப்பட்ட குற்றச்சாட்டில் அவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில் அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் மட்டக்களப்பு நீதிமன்று அளித்த 6 வருட சிறைத் தண்டனை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முடிவுற்ற நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# யாழ். பல்கலையில் ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒன்று கூடல் நிகழ்வு, இரண்டு வருடங்களின் பின்னர் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் சமூக பொறுப்புக்கள், செயற்பாடுகள் தொடர்பாக கலைப்பீடாதிபதி சுதாகரால் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

கலைப்பீடாதிபதி சுதாகரின் பங்களிப்புடன் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.ஜெல்சினின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ஒ-14-125)



# மஹோற்சவம்

சாவகச்சேரி, ஜூலை 22

நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் ஓகஸ்ட் முதலாம் திகதி திங்கட்கிழமை சப்பரத்திருவிழாவும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 3 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலயபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-14-159)

# கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

மாவிட்டபுரம் கந்தனின் மஹோற்சவ பெருவிழா ஆரம்பமாகி இடம்பெற்றுவரும் வேளையில் கார்த்திகைத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அத்துடன் வேட்டைத்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமையும் சப்பரத் திருவிழா 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தேர்த்திருவிழா 27 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத்திருவிழா 28 ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம்பெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார்.

(ஒ-14-125)



# மரண அறிவித்தல்



பிறப்பு 30.12.1952

இறப்பு

## வேதவனம் பாலசுப்பிரமணியம்

(முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர் – பூநகரி ப.நோ.கூ.சங்கம்)

ஆலங்கேணி பூநகரியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேதவனம் பாலசுப்பிரமணியம் (முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர் - பூநகரி ப.நோ.கூ.சங்கம்) நேற்று (21.07.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ரதிகுமாரியின் (ஓய்வு நிலை உப அதிபர் - யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை.) பாசமிகு கணவரும், அகீபன் (லண்டன்) நிலக்சன் (விரிவுரையாளர் பொறியியல் பீடம் - யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சூர்யா (லண்டன்) துவாரகி (Researcher, Idea's Consultancy - Colombo) ஆகியோரின் மாமனாரும், பூமணிதேவி, விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் புவனேஸ்வரி, இந்திராதேவி (அதிபர், கிளி / கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை), காலஞ்சென்ற சிறீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் கோகிலா, செல்வரத்தினம், பாலகிருஷ்ணன் சுந்தரமூர்த்தி (தலைமைப்பீட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தி திணைக்களம்,கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாந்தகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமாரி, வசந்தகுமாரி (பிரான்ஸ்),ராஜ்குமார் (பிரான்ஸ்), விஜயகுமாரி (ஜேர்மன்), ரவிக்குமார்(பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், பாலசிங்கம், கதிர்காமநாதன், மற்றும் ஆனந்தி (பிரான்ஸ்), கேசேந்திரன் (ஜேர்மன்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.07.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக முற்பகல் 11 .00 மணிக்கு பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ரதிகுமாரி (மனைவி) : 076 891 5072
அகீபன் (மகன்) : 0044 741 318 2205
நிலக்சன் (மகன்) : 077 959 9104

தகவல் : குடும்பத்தினர்

(CS 20044) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதுவா இராஜதந்திரம்?

வடக்கு – கிழக்கு தமிழர்களின் பிரதான கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இன்றுவரை இருந்து வருகின்றது. தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் முதன்மைப் பாத்திரத்தை ஏற்று அது இயங்கி வருகின்றது. போருக்குப் பின்னரான காலகட்டத்தில் அந்தக் கட்சி இராஜதந்திர ரீதியில் நடவடிக்கைகளை எடுப்பதாக அடிக்கடி கூறிக்கொள்கின்றது. ஆனால் இந்த 13 ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு கணிசமான முன்னேற்றத்தை அந்தக் கட்சியால் வழங்கமுடியவில்லை.

ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் அந்தக் கட்சி எடுத்துக் கொண்ட முடிவு, வரலாற்றுத் தவறு என்பதை இப்போது கூட அந்தக் கட்சி ஏற்குமோ தெரியவில்லை. ஆனால், கட்சியின் தலைமைத்துவம் எடுத்த முடிவை, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலிந்து திணித்தது என்பது, வாக்களிப்பின்போது அவர்கள் கட்சியின் முடிவுக்கு மாறாக வாக்களித்தமையிலிருந்து அப்பட்டமாகத் தெரியவருகின்றது.

தமக்கு வாக்களித்த மக்களின் கருத்துக்களை உள்வாங்காத, ஆகக்குறைந்தது தமது கட்சியின் மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணப்பாட்டை புரிந்து கொள்ளாத கட்சித் தலைமையால், தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றமுடியும் என்று இனியும் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமன்று.

ஜனாதிபதித் தெரிவின்போது, ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுர என்ற மூன்று பேரில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, ஆழமாக – அகலமாக ஆராயாமல் முடிவெடுத்துள்ளது.

கடந்த காலங்களில் எழுத்துக்களில் உடன்பாடுகள் உள்ள போதும் அவை கிழித்தெறியப்பட்டன என்று கூறியே, நல்லாட்சிக் காலத்தில் இதயத்தால் இணைந்துள்ளோம் என்று கூட்டமைப்புக் கூறியது. ஆனால், அதற்கு மாறாக எந்த நம்பிக்கையின் அடிப்படையில் டலஸ் அழகப்பெருமவுடன் எழுத்துமூல உடன்படிக்கையை நம்பி கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது என்பது பெரும் கேள்வியே.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க, தனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை இரண்டு தடவைகள் எதிர்கொண்டார். கூட்டமைப்பின் ஆதரவின்றி அவரால் வெல்லமுடியாது என்ற சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு அவருக்கு ஆதரவளித்தது. அப்போது, அவரிடம் எழுத்துமூலமான உடன்படிக்கையை இரண்டு தடவைகளும் மேற்கொண்டது. ஆனால் இறுதிவரை உடன்படிக்கையை ரணில் நடைமுறைப்படுத்தவில்லை.

ஜனாதிபதித் தெரிவின் பிரதான இரண்டு வேட்பாளர்களையும் நம்ப முடியாத சூழலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப்போன்று வாக்களிப்பதிலிருந்து ஒதுங்கியிருக்கும் முடிவை கூட்டமைப்பு தலைமை எடுத்திருக்க முடியும். ஆனால், அவ்வாறானதொரு நிலைப்பாட்டுக்குச் செல்லாமல், சிங்கள கடும்போக்குவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள டலஸ் அழகப்பெருமவை, எழுத்துமூல ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆதரித்தது என்பது நம்பக்கூடியதல்ல.

ஜனாதிபதித் தெரிவின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கான வெற்றி வாய்ப்பு அதிகம் இருக்கின்றது என்பது வெளிப்படையாகவே தெரிந்த நிலையில், அவரை ஆதரிக்க முடியாவிடினும், ஆகக் குறைந்தது வாக்களிப்பிலிருந்து ஒதுங்கியிருக்கலாம்.

இப்போது எல்லாவற்றையும் குழப்பியடித்துவிட்டு, எதிர்காலத்தில் தமிழ் மக்களின் விடயங்களை ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பு இனி எப்படிக் கையாளப் போகின்றது? தமிழர்களை தமது முட்டாள்தனமான முடிவால் முட்டுச் சந்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றார்கள்.


இராஜதந்திரிகளை வளைத்துப்போட்டவர்கள் என்று தேர்தல் காலத்தில் கூவிய கூட்டமைப்பினர், இப்போது செய்திருப்பதை எந்த வகைக்குள் சேர்க்கப்போகின்றார்கள்?

சிங்கள மக்கள் தங்களின் அரசன் என்று வணங்கியவரையே வீட்டுக்கு போகும் வரையில் அடித்து விரட்டினார்கள். தமிழர்களும் தங்களின் தலைமைகள் என்று ... கின்றவர்களை வீட்டுக்கு விரட்டினால்தான் ... வரும்.

## நாளொரு நல்வார்த்தை

''சிந்தனையும் செயலும் ஒன்றாகி விட்டால் வாழ்க்கையில் வெற்றியை எளிதில் பெற்று விடலாம்''

- ராமதாசர்




# ரணிலின் பக்கம் சாய்ந்த கூட்டமைப்பு எம்.பிக்கள்!

**கொழும்பு, ஜூலை 22**

**நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு நடந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலுக்கு வாக்களித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.**

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். சஜித் பிரேமதாஸ தரப்புக்கு ஆதரவளிப்போம் என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 14 பேர் வரையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்துள்ளனர் என்று ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சஜித் தரப்பில் இருந்து ரணிலுக்கு வாக்களித்தவர்களில் 8 பேர் தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலை எதிர்த்துக் களமறிங்கிய டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு வழங்கியிருந்தது. ஆயினும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# கட்சிகளின் கைபிடியில் உறுப்பினர்கள் இல்லை!

## மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 22

கட்சிகள் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய உறுப்பினர்கள் தீர்மானங்களை எடுக்கவில்லை என்பதை புதிய ஜனாதிபதித் தெரிவு பெறுபேறுகள் மூலம் உணர்ந்து கொள்ளமுடியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த ஜனாதிபதித் தெரிவு வாக்கெடுப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இப்போது மக்கள் ஒரு பக்கமும், நாடாளுமன்றம் ஒரு பக்கமாகவும் உள்ளனர். எமது கட்சியில் மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளிலும் கட்சிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய உறுப்பினர்கள் செயற்படவில்லை.

அதேவேளை, நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமையில் ஒவ்வொருவரும் நாட்டுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (எ-இ)

நாளை
23.07.2022
சனிக்கிழமை
ஆடி 07
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32
கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாட்டின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் அவரது ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி கொண்டாடினர். (ச-19)



புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவாகியதையடுத்து நேற்று உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றார். இதனை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சியின் ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி நேற்றுக் கொண்டாடினர். (ச-27)



## ஜனாதிபதியானார் ரணில்; வவுனியாவில் ஆரவாரம்

வவுனியா, ஜூலை 22

நாட்டின் 8ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதை அவரது ஆதரவாளர்கள் வவுனியாவில் கொண்டாடியுள்ளனர். வவுனியா நகரப் பகுதியில் ஒன்றுகூடி வெடிகள் கொளுத்தி, ஆரவாரம் செய்து அவர்கள் ரணில் விக்கிரம சிங்கவின் வெற்றியைக் கொண்டாடினர். (எ-110)

## ரயில் பயணச்சீட்டுக்குத் தட்டுப்பாடு விரைவில் இலத்திரனியல் சிட்டை!

கொழும்பு, ஜூலை 22

ரயில் பயணச்சீட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ரயில்வே பொறுப்பதிகாரிகள் சங்கத் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையில் அனைவரும் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அரச அச்சகத் திணைக்களத்தில் பயணச்சீட்டு அச்சடிக்கும் நடைமுறை இடைநிறுத்தம் மற்றும் பயணச்சீட்டுகளை அச்சிடுவதற்கான பணியாளர்கள் பற்றாக்குறையால் ரயில் பயணச்சீட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலத்திரனியல் பயணச்சீட்டுகளை வழங்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

இணுவில் தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலின் மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 13 நாள்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழாவும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் ஓகஸ்ட் முதலாம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய சைவநெறிக்கூடம் அறிவித்துள்ளது. (ஒ-14)

## முல்லை கலைஞர்களின் குறும்படங்கள் வெளியீடு

முல்லைத்தீவு, ஜூலை 22

முல்லைத்தீவு மாவட்ட யோகம்மா கலைக்கூடம் பெருமையுடன் வழங்கும் கலைஞர் கு.யோகேஸ்வரனின் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவாக்கப்பட்ட 'அரிது அரிது' மற்றும் 'பாரச்சிலுவை' என்ற இரண்டு குறும்படங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்த இரண்டு குறும்படங்களும் முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்களின் விடாமுயற்சியினால் முழுமை பெற்று சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளன. (ஒ-14,19)

## வாசகர் திருமுகம்

### உதயனின் ஆசிரிய தலையங்கங்கள் மொழிமாற்றம் செய்யப்பட வேண்டும்!

உதயன் நாளிதழின் நீண்டகால வாசகர்களில் நானும் ஒருவன். சமீபகாலமாக தங்கள் பத்திரிகையில் வெளியாகும் சமூக, கலாசார, உள்நாட்டு, சர்வதேச அரசியல், பொருளாதாரம், விவசாயம், மருத்துவம் பற்றிய கட்டுரைகள் (ஆய்வு) மிகவும் தரமானவையாகவும் உயர்கல்வி மாணவர்க்கு அதிக பயனுள்ளதாகவும் அமைகின்றன. இவற்றின் தலையங்கங்கள் உள்ளடனை மேலெழுந்தவாரியாக வாசிக்க அல்லாமல் ஆர்வத்தைத் தூண்டுபவையாக அமைந்துவிடுவது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமானது அந்தப் பத்திரிகைக்கு சமூக மட்டத்திலான அந்தஸ்தைக் காட்டி நிற்பதில் பெரும் வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இவற்றின் கருத்துக்கள், கணிப்புக்கள், மதிப்பீடுகள், எதிர்வு கூறல்கள், சொற்பிரயோகங்கள், சொல்லோட்டங்கள் கச்சிதமாகப் பொருந்திவருவதுடன் மக்களின் கருத்துக்களுடனும் ஒன்றித்தனவாகக் காணப்படுவது உதயனின் வாசகர் கூட்டத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. அதனது 36 வருடப் பயணத்தில் வேறுவேறு ஆசிரியர்களைக் கண்டிருப்பினும் ஆசிரியர் தலையங்கத்தை வரையும் பேனாமுனைகள் மட்டும் தொடர்ந்தும் ஏறுமுகமாகவே செல்வதும் உதயனுடன் கூடப்பிறந்த வித்துவச் சிறப்பாகும்.

சில கட்டுரைகளையும் ஆசிரிய தலையங்கங்களையும் மொழியாக்கம் செய்து தென்னிலங்கைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி அங்குள்ள புத்திஜீவிகளை சென்றடைய ஊடகவியலாளர் சமூகம் முன்வருமேயானால் அது சமூகங்களிடையேயான முரண்பாடுகளைக்குறைப்பதற்கும் அதன்மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் இலங்கைத் தேசியத்துக்கு உதயனும் தனது ஊடகப் பங்களிப்பை வழங்கக்கூடியதாகவிருக்கும்.

செல்வ வேலாயுதம்
கற்பகச்சோலை, வட்டு வடக்கு.

## எரிபொருள் நிலையங்களுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ்ப்பாணத்தில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றுமுதல் மீண்டும் பொலிஸ் பாதுகாப்புப் போடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இன்று முதல் எரிபொருள் விநியோகப் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளன. இந்த நிலையில், எரிபொருள் வழங்கலின்போது ஏற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்ப்பதற்காகவும் சீரான விநியோகத்தை உறுதிப்படுத்தும் வகையிலுமே மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. (ம-17)

## விமான நிலையம் செல்வோருக்கு எரிபொருள் விநியோகப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வெளிநாட்டிலிருந்து வருகை தந்து விமான நிலையத்துக்குத் திரும்பிச் செல்பவர்களுக்கான எரிபொருள் விநியோக விண்ணப்பம் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

அதற்கமைய விண்ணப்பப்படிவத் தில் பிரதேச செயலகங்களின் அலுவலக திகதி முத்திரையைப் பொறித்து விண்ணப்பப்படிவங்களை கிராம அலுவலர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் மாவட்டச் செயலகத்திலிருந்தும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் விண்ணப்பத்தின் போட்டோப் பிரதிகளும், திகதி முத்திரை அல்லாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் செயலர் தெரிவித்தார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

# நேற்றைய மிகுதி எரிபொருளை இன்றும் விநியோகிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 22

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நேற்றைய மிகுதி எரிபொருளை, அடுத்த தவணைக்காகக் காத்திராமல் இன்றும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நேற்றைய தினம் எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட எரிபொருள் தவிர்ந்த மிகுதி எரிபொருளை அடுத்த தவணை வரைக்கும் காத்திருக்காமல் இன்றும் உரிய திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு அமைய நிரப்புநிலையங்கள் விநியோகிக்கலாம் என்று மாவட்டச் செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆதலால், இன்று குறித்தொதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் தவிர, நேற்றையதினம் எரிபொருள் வழங்கலை முன்னெடுத்து இருப்பு மீதியைக் கொண்டுள்ள நிலையங்களும் விநியோகப் பணிகளை முன்னெடுக்கவுள்ளன. (அ-ம)

### புதிய...

அமைச்சரவை பதவியேற்பு காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

பிரதமராகப் பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன் தினம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து அவர் பிரதமர் பதவியில் இருந்து அரசமைப்பின் பிரகாரம் விலகினார். இதனால், ஏற்கனவே இருந்த அமைச்சரவை வறிதாகியது. இதனால் அமைச்சர்களின் பதவிகளும் அதிகாரங்களும் நீக்கப்பட்டன.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து, அமைச்சரவை தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு எழுந்தது. இந்த நிலையிலேயே புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கின்றது. ரணில் பிரதமாகப் பதவியேற்றபோது நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் மீண்டும் அந்த அமைச்சரவைகளுக்கு நியமிக்கப்பட கூடுதலான வாய்ப்பு இருக்கின்றது என்று தெரியவருகின்றது.

நேற்றையதினம் சஜித் பிரேமதாஸவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே நீண்டநேரம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு சஜித் பிரேமதாஸ ஏதேனும் ஓர் பொறுப்பு வாய்ந்த அமைச்சை பெற்றுக்கொள்ளும் திரைமறைவு நகர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கலாம் என்றும் அரசியல்அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேநேரம், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ரணில் அதி தீவிரம் காட்டுவதால் பிரதமர் பதவியில் எதிர்வுகூறலுக்கும் அப்பாற்பட்ட விடயங்கள் இருக்கலாம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. (அ-ம)

### ஜனாதிபதியின்...

கீழ் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர், புதிய ஜனாதிபதி சீர்திருத்தங்களின் வலுவான ஆதரவாளர் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் பொருளாதாரம் அடுத்த இரு மாதங்களில் 70 வீதமாக அதிகரித்த பின்னர் செப்ரெம்பரில் குறைவடையும். இலங்கையின் 17ஆவது சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் சர்வதேச நாணயநிதியம் நிதியை வழங்க ஆரம்பித்ததும் உலகவங்கியும் ஆசியவங்கியும் மேலதிகமான நான்கு பில்லியன் டொலரை வழங்கலாம்.

தற்போதைய நெருக்கடி என்பது இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடம். இந்த நெருக்கடி மூலம் கற்றுக்கொண்ட அனுபவம் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டம் முடிவடைந்ததும் அவர்கள் சீர்திருத்தங்களை கைவிடக்கூடாது. திட்டங்கள் முடிவடைந்ததும் அதிகாரிகள் பின்னோக்கி நகர்வதையும் சிறந்த கொள்கைகளைக் கைவிடுவதையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம். என்னைப் பொறுத்தவரை இது அதிகாரிகளுக்குப் பாடங்களை கற்றுக்கொண்டு முன்னோக்கி சரியான திசையில் நகர்வதற்கான வாய்ப்பு. பொருளாதாரத்தை தொடர்ந்தும் பேண்தகு நிலையில் நிர்வகிப்பதற்கு இது எங்களுக்கு அவசியம்.

புதிய ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சில் ஈடுபட்டுள்ளார். அந்த அர்ப்பணிப்பு தொடரும் என நான் எதிர்பார்க்கின்றேன். விரைவில் அது சாத்தியமானால் அது சிறந்த விடயம். அதன் காரணமாக நாங்கள் அனுபவிக்கின்ற துயரத்தின் காலத்தை குறைக்கலாம் - என்றார். (அ-ம)

### சந்தர்ப்பவாதிகளுக்கு...

விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இவ்வாறு வலியுறுத்தினார் சஜித்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தனது ருவிற்றரில் பதிவிட்டுள்ள சஜித், 'கட்சித் தலைவர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து எனக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. நட்பு ரீதியாகவும் நேர்மையாகவும் இந்தக் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் தேசிய ஒருமித்த கருத்தை ஏற்படுத்த வல்லவர்களுக்கு அமைச்சுக்களை வழங்குமாறும், நாடாளுமன்றத்தின் குழு அமைப்பை பலப்படுத்துமாறும் இந்தச் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது' என்று தெரிவித்துள்ளார். (அ-ம)

### பிற பிரதேச...

பெற்றுக்கொள்ள முடியாது விட்டால், அருகிலுள்ள அல்லது வேறு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் பிரதேச செயலர்களுக்கு நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்றையதினம் சில பிரதேச செயலர் பிரிவுகளில், தமது பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சில பிரதேச செயலர் பிரிவுகளில் அந்த நடைமுறை பின்பற்றப்பட வில்லை. இதனால் குழப்பம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் தெளிவுபடுத்தி மாவட்டச் செயலர் நேற்று மாலை பிரதேச செயலர்களுக்கு அனுப்பிய கடிதத்திலே,

கியூ.ஆர். குறியீட்டு முறைமை நடைமுறைக்கு வரும் வரையில் எரிபொருள் அட்டைக்கே யாழ். மாவட்டத்தில் எரிபொருள் வழங்கப்படும். மக்களுக்கு விரைந்து எரிபொருள் அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எரிபொருள் விநியோகத்தின்போது பரவலாக எல்லாப் பிரதேசங்களுக்கும் குறித்த தினத்தில் எரிபொருள் விநியோகம் இடம்பெறாமை காரணமாக ஏதேனும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறலாம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-5)

### சஜித்...

வருகின்றது.

அதன் வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணி தலைவர் பதவியில் இருந்து மயந்த திஸாநாயக்க விலகியுள்ளார். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோருக்கு பதவி விலகல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மயந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலில் ஊடாக நாடாளுமன்றத்துக்குப் பிரவேசித்தார். இந்த நிலையில், மயந்த திஸாநாயக்க எம்.பி., ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முழுமையாக விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-22)

### ரணிலுடைய...

படையில் முடிவுகளை எடுத்து எங்களால் இயன்றதைச் செய்வோம் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பதவியேற்றுள்ளார். தன்னுடன் இணைந்து செயற்படத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவர் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் எமது செய்தியாளரிடம். நேற்றிரவு சம்பந்தன் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். அவர் பதவியேற்பதற்கு முன்பதாகப் பல விடயங்கள் பற்றிப் பேசியுள்ளார். நாட்டின் பல தேசிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி இடைக்கால அரசை நிறுவவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டினுடைய பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நாடு செயற்பட முடியாத நிலைமை ஏற்படுவதற்கு முன்பதாக சாதகமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அவற்றைப் புதிய ஜனாதிபதி செய்வார் என்று நான் நம்புகின்றேன்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை. புதிய ஜனாதிபதி இதற்கு முன்பதாக முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

தற்போது அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவருடன் இருப்பவர்கள் அரசியல் தீர்வு விடயம் குறித்து கரிசனை செலுத்துவர்களா என்பதை நாங்கள் கொஞ்சம் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். எனவே, நாங்கள் பொறுத்துப் பார்த்து அவர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுத்து எங்களால் இயன்றதைச் செய்வோம்' - என்றார். (அ-ம-22)

### போராட்டக்களத்தை...

போராட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர்.

2022ஆம் ஆண்டு மே மாதம் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதை அடுத்து, அரச எதிர்ப்பு போராட்டக்காரர்களால் 'நோ டீல் கம' போராட்டக்களம் அமைக்கப்பட்டது.

மே 9 ஏற்பட்ட வன்முறையின் பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதையடுத்து அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரி மாளிகைக்கு முன்னால் 'நோ டீல் கம' போராட்டக்களத்தை அமைத்தனர். இதையடுத்து இலங்கையின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பதவியேற்றுள்ள நிலையில், குறித்த பகுதியில் இருந்த போராட்டக்களத்தை அங்கிருந்து அகற்ற போராட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர். (அ-ம)

### நாடாளுமன்றக்...

தெரிவித்துள்ளார்.

அத்துடன், நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றும், 24 மணித்தியாலங்களில் மீண்டும் நாடாளுமன்ற கூட்டத்தொடரை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### பாதுகாப்பு...

ரத்னவால் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார். அதைத் தொடர்ந்து பாதுகாப்புத் துறையினருடன் ஜனாதிபதி சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்புப் பதவிநிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (அ-ம)

### எரிவாயுப்...

என்று நம்புகின்றோம். இந்த மாதத்தின் இறுதிக்குள் இலங்கைக்கு சுமார் ஏழு எரிவாயுக் கப்பல்கள் வரவுள்ளன. எரிவாயு இறக்குமதிக்குத் தேவையான டொலரைப் பெற்றுக்கொள்ள இயலுமாகவுள்ளது. ஆதலால், இந்த மாதத்தின் இறுதிக்குள் இந்த நெருக்கடி தீர்க்கப்படும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு தீண்டிய இளைஞன் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 22

படுக்கையில் கண்ட பாம்பைக் கையால் பிடித்து வெளியே எறிய முற்பட்ட இளைஞர் பாம்புத் தீண்டலுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. 21 வயது இளைஞரே இவ்வாறு பாம்புத் தீண்டலுக்கு உள்ளாகி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(ஓ-14.9)

# ரயில் கட்டண அதிகரிப்பு இன்றுமுதல் நடைமுறை

கொழும்பு, ஜூலை 22

ரயில் கட்டண அதிகரிப்பு இன்று 22ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன வின் கையொப்பத்துடன் நேற்று இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதில் பயணிகள் போக்குவரத்து, கொள்கலன் போக்குவரத்துக்கான ரயில் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 10 ரூபாவாக இருந்த 3 ஆம் வகுப்புக்கான குறைந்த பட்ச பயணக் கட்டணம் 20 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் ரயில்வே திணைக்களத்துக்கு தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள நஷ்டம் ஆகியவற்றால் இந்தக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

(ச-இ)

# இலங்கையின் முட்டாள்தனமே இந்தநிலைமைக்குக் காரணம்

## சி.ஐ.ஏயின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

இலங்கை சீன முதலீடுகளில் முட்டாள்தனமாக நுழைந்தமையே, இப்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்குக் காரணம் என்று, அமெரிக்காவின் உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் தலைவரான பிலின்பேர்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சீனாவுக்கு தன்னை முன்னிறுத்தும், வலிமையும் முதலீட்டைக் கவரும் திறன் உள்ளது. சீனாவிடம் மிகப் பெருமளவு கடனைப் பெற்றுள்ள இலங்கை போன்ற நாடுகள் தொடர்பாக உலக நாடுகள் சிந்திக்க வேண்டும். இலங்கை தனது பொருளாதார எதிர்காலம் தொடர்பான முட்டாள்தனமாகப் பந்தயம் கட்டியுள்ளது. அதனாலேயே அந்த நாடு அரசியல் ரீதி யாகவும், பொருளாதார ரீதியாகவும் பேரழிவான விளைவுகளை எதிர்கொண்டுள்ளது- என்றார்.

(எ-இ)

# வாகன வசதியின்றித் தவித்த கர்ப்பிணிக்கு உதவிய பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 22

பிரசவவலி ஏற்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வாகன வசதி இல்லாது தவித்த நிலையில், வட்டுக்கோட்டைப் பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டுத் தங்கள் வாகனம் மூலம் மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.

பிரசவவலியில் துடித்த பெண்ணை முச்சக்கர வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில், வட்டுக்கோட்டைச் சந்திக்கு அருகே முச்சக்கர வண்டி பெற்றோல் இன்றி நின்றுள்ளது. பெற்றோலுக்காக அங்கும் இங்கும் அலைந்த சாரதியும், உறவினர்களும் பொலிஸ் நிலையைத் துக்குச் சென்று சிறிதளவு பெற்றோல் கேட்டுள்ள னர்.

நிலைமையை உணர்ந்த பொலிஸார் உடனடியாக பொலிஸ் வாகனத்தில் கர்ப்பிணிப் பெண்ணை ஏற்றிச் சென்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.

(எ-125)

வான் வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு Hiace வான் மாதாந்த வாடகைக்கு சாரதி இல்லாமல் நீண்ட கால குத்தகைக்கு தேவை.

077 83 95 849

பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு சமையலில் நன்கு அனுபவம்பெற்ற ஒருவர் தேவைப்படுகின்றார்.

076 816 2331, 074 115 4643

# சிறுவனை காணவில்லை

வவு.ஜூலை 22

வவுனியாவில் 15 வயதுச் சிறுவன் ஒருவரைக் காணவில்லையென அவரது பெற்றோர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வவுனியா, தேக்கவத்தை, ஆலடி சந்தியைச் சேர்ந்த ஜசோதரன் கிஷால் என்ற சிறுவனே காணாமற்போயுள்ளான் எனத் தெரிவிக்கப்படு கிறது.

நேற்றுமுன்தினம் காலை வீட்டிலிருந்து சென்ற குறித்த சிறுவன் இரவாகியும் வீடு திரும்பாததால் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(ச-110)

காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு லட்சம் (400000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள். மண்டபங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029



உ
ஓம் சக்தி

மிருசுவில் படித்த மகளிர் திட்டம், துர்க்காபுரம்

ஸ்ரீஞானதுர்க்கை அம்பாள் தேவஸ்தானம்

அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2022

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே!

மிருசுவில் படித்த மகளிர் திட்டம். துர்க்காபுரத்தில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைக்கு சுபகிருது வருடம் **ஆடி மாதம் 23 ஆம் திகதி (23.07.2022) சனிக்கிழமை அலங்கார உற்சவம் ஆரம்பமாகி 01.08.2022 திங்கட்கிழமை பத்தாம்** நாள் **தீர்த்த உற்சவத்துடன்** நிறைவு பெறவுள்ளது. **தினமும் காலை 9.00 மணிக்கு ஸ்தாப அபிசேகம் ஆரம்பமாகி பூஜை திருவிழா என்பனவும், அம்பாள் வீதியுலாவும், மாகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.**

9 ஆம் நாள் (31.07.2022) ஞாயிற்றுக்கிழமை
தேர்த் திருவிழா இடம்பெறும்.
அன்று ஆயைத்தில் வாக்களிக்கும் தாயானவள் அம்பாளுடன் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களில் ஏறி நின்று வரும் காட்சியும் இடம்பெறும் என்பதுடன் இவ்விழாக் காலங்களில் அடியவர்கள் வருகை தந்து எல்லாம்வல்ல

அம்பாளின் பாதார விந்தத்தினை தொழுது
நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

சிவத்திரு சி.நவரத்தினம்
ஆலயத் தர்மகர்த்தா

(cs 20043) (3.6)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில்

55 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(நிலப்பரப்பு)

- யாழ். நகரத்தில் இருந்து 4 KM தூரத்தில் அமைந்துள்ளது.
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.



பார்வையிடும் நேரம்:
காலை 6 மணிமுதல்
மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை

ஜெயம்: 077 814 7389
077 241 7589

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.










பாஸ்.. ரணிலுக்கு 1989இல் நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்தாங்களாம் என்ற போஸ்ட்டை மறுபடியும் தூக்கிட்டு வர்றானுங்க..






Suhir Sathya Medha
20h

இந்த லட்சணத்துல ரெண்டு வேட்பாளர்களும் ஒரேயளவான வாக்குகளை எடுத்தால் ரெண்டு பேர்ட பேரையும் எழுதி துண்டு குலுக்கி எடுக்கணுமாம் எண்டு நேத்து ஒருத்தர் போஸ்ட் போட்டிருந்தாப்ல.




## பூச்சிகளின் தாக்கத்தால் முருங்கைச்செய்கை வீழ்ச்சி

*உரத்தட்டுப்பாடும் காரணமென முருங்கைச் செய்கையாளர்கள் கவலை*

கிளிநொச்சி, ஜூலை 22

கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக் குட்பட்ட பிரமந்தனாறு மயில்வாகனபுரம் கிராமத்தில் உரத்தட்டுப்பாட்டுக்கு மத்தி யிலும் மேற்கொள்ளப்பட்ட முருங்கைப் பயிர்ச் செய்கை, இனங்காண முடியாத ஒரு வகைப் பூச்சிகளின் தாக்கத்தால் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று முருங்கைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கைக்கான உரத்தைப்பெற முடியாமல் கிடைக்கப்பெற்ற உரத்தைக் கொண்டு முருங்கைச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் பூச்சிகள் முருங்கைச் செய்கையை அழித்துள்ளன. எனவே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முருங்கை செய்கை யாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-14-113)

## வெளிநாட்டுத் தபால் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 22

வெளிநாட்டு தபால் பொருள்களை ஏற்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கைக்கான விமான சேவைகள் இடைநிறுத்தம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக இந்தச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் அமெரிக்கா, நெதர்லாந்து, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கான தபால் பொருள்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இலங்கை போன்று மலேசியா இல்லை

## மலேசிய நிதியமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 22

இலங்கையைப் போன்று திவாலாகும் அபாயக் கட்டத்தில் மலேசியா இல்லை. மலேசியா நிலையான பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது என மலேசிய நிதியமைச்சர் தெங்கு ஜஃப்ருல் அஜிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திவாலாகும் பொருளாதார சிக்கலை மலேசியா எதிர்கொள்கிறது என்று சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் தெரிவிக்கவில்லை.

மலேசியாவின் பொருளாதார குறிகாட்டிகளை இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கையின் பொருளாதார கட்டமைப்பைவிட மிகவும் நிலையான கட்டமைப்பை மலேசியா அரசாங்கம் கொண்டுள்ளது.

ப்ளூம்பெர்க் கணக்கின் ஒரு வருட இயல்புநிலை நிகழ்தகவு இலங்கையின் 19.4 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மலேசியாவில் 2.43 சதவீதமாக உள்ளது.

எனினும் எமது அரசாங்கம் நாட்டின் நிதியை விவேகத்துடன் நிர்வகித்து கடன் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும் -என்றார். (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கவனமுடன் செயல்படுவதால் உங்கள் முயற்சி வெற்றியாகும். மனதில் குழப்பம் அதிகரிக்கும். செயல்களில் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். கவனம் தேவை.

**இடபம்:** லாப குரு வக்கிரமடைந்துள்ளதால் பொருளாதார தடை உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விவாதங்கள் உண்டாகும். எதிர்பார்ப்பு இழுபறியாகும்.

**மிதுனம்:** குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். நீண்ட நாள்களுக்குப் பின் உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கடகம்:** வாய்ப்புகளைப் பயன்படுத்தி எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். முயற்சி நிறைவேறும். நண்பர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பீர்கள்.

**சிம்மம்:** இரண்டு நாட்களாக ஏற்பட்ட நெருக்கடி விலகும். பண முயற்சி பலிதமாகும். தடைபட்ட செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கன்னி:** சந்திராஷ்டமம் என்பதால் செயலில் நெருக்கடி தோன்றும். மனம் சோர்வடையும். முயற்சியில் தாமதம் உண்டாகும். அடுத்தவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**துலாம்:** சத்ரு ஸ்தானாதிபதி வக்கிரம் என்பதால் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். குடும்பத்தில் உண்டான சங்கடம் விலகும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். தடைகள் விலகும்.

**விருச்சிகம்:** தடைகளை விலக்கி புதிய பாதையில் பயணம் செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். புதிய முயற்சிகள் நன்மையாகும். வேலையைச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். சேமிப்பில் உங்கள் கவனம் செல்லும். எதிர்பார்த்த மகிழ்ச்சியை அடைவீர்கள். சங்கடம் விலகும்.

**மகரம்:** அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள். வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். வியாபாரத்தில் கவனம் அதிகரிக்கும்.

**கும்பம்:** நீண்ட நாளாக முடிவிற்கு வராமல் இருந்த பிரச்னை இன்று முடிவுக்கு வரும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள்.

**மீனம்:** வக்கிர குருவால் சங்கடம் விலகும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். பழைய பிரச்சினை முடிவிற்கு வரும். வருமானத்தை பெருக்க முயற்சிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை

**கீரிமலை ஆடி அமாவாசை தினத்திற்கான (28.07.2022) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் குருக்களை பதிவு செய்தல்**

**தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஏலத்தில் வழங்கல்**

கீரிமலை ஆடி அமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்னிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் (26.07.2022) செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணிக்கு முன்பாக தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். பகிரங்க ஏலம் 2022.07.26 ஆம் திகதியன்று (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 10.30 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலையத்தில் நடைபெறவுள்ளது.

**குறிப்பு:-**

* சித்திபெற்ற கேள்வித்தாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப் பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
* ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்துக்கு பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகள் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
* உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.
* பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
* சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றல் வேண்டும்.

**பிதிர் கடன் கிரியைகள் மேற்கொள்ளும் குருக்களை பதிவு செய்தல்**

பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் குருக்கள் 27.07.2022 (புதன் கிழமை) காலை 11.00 மணிக்கு முன்னதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூ.1000.00 கட்டணம் செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் எம்மிடம் பதிவுகளை மேற்கொள்ளப்படாத குருக்கள் ஆடி அமாவாசை தினத்தன்று பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**
**22.07.2022**


### தலைமன்னார் கடலில்

# எல்லைதாண்டி மீன்பிடித்த 6 மீனவர்கள் கைதாகினர்

**கொழும்பு, ஜூலை 22**

**இலங்கைக் கடற்பரப்பினுள் எல்லைதாண்டி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 6 ராமேஸ்வர மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். அத்துடன் அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய படகும் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.**



இலங்கைக் கடற்படையினர் தலைமன்னார் கடலில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் தலைமன்னாருக்கும் நாச்சிகுடாவுக்கும் இடையே எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்தனர். அதில் ஒரு படகுடன் 5 மீனவர்கள் இயந்திரக்கோளாறு காரணமாகவும் காற்றின் வேகத்தாலும் எல்லை தாண்டி வந்ததாக தெரிவித்ததையடுத்து படகை சோதனை செய்தபோது இயந்திரக்கோளாறு உறுதி செய்யப்பட்டது. அதனையடுத்து அதிலிருந்த 5 மீனவர்களை தமிழகத்துக்குத் திருப்பியனுப்பினர்.

மற்றொரு படகில் எல்லைதாண்டி மீன்பிடித்த 6 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்கள் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சிவபாக்கியம் நடராசா

ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர், ஆங்கிலம்
(வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம்)
ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்
(காரை இந்துக் கல்லூரி, ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை, மெய்கண்டான் வித்தியாசாலை)
திட்ட இணைப்பாளர் GTZ
வளவாளர் – ஆறுதல் நிறுவனம்

"தங்கள் வாழ்க்கைப் பயணத்தின்
கல்வித் தடங்கள் பல இன்றும்
நம்மில் பலபேரது கல்விப்
பயணத்திற்கு வழிகாட்டும்
தடங்களாய் நீண்டு செல்வது
தங்கள் தகைமையின் உயர்வே"

என்றும் உங்கள் மறவா
நினைவுகளோடு
குடும்பத்தினர்

மண்ணில்
13.03.1944

விண்ணில்
18.07.2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் முதற்தர வங்கியியல் நாமமான இலங்கை வங்கி The Banker Magazine - UK இனால் 2022 ஆம் ஆண்டின் உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாக மீண்டும் தரப்படுத்தப்பட்டுள்ளது. சவால்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் கிடைத்திருக்கும் இச்சர்வதேச அங்கீகாரமானது வங்கியின் நிதிசார் பலம், ஸ்திரத்தன்மை, நாட்டின் முதற்தர வங்கி என்ற ஸ்தானம் என்பவற்றுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது.

என்றும் எம்மோடு இணைந்திருக்கும் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

1975 BOC CALL CENTRE

www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் கியூ.ஆர் பதிவை உடனடியாக மேற்கொள்ளுங்கள்

மன்னார், ஜூலை 22
மன்னாரில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான "கியூ.ஆர்" பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு மன்னார் மாவட்டச்செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் கோரிக்கை விடுத்துள்ளார்.
எரிபொருளை விநியோகிக்கும் "கியூ.ஆர்" குறியீட்டு முறை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதால் மன்னார் மாவட்டத்தில் உள்ள வாகன உரிமையாளர்கள் அனைவரையும் "கியூ.ஆர்" முறைமையில் பதிவு செய்துகொள்ளுமாறு ஸ்ரான்லி டிமெல் கோரிக்கை விடுத்துள்ளார்.
அத்துடன் நடைமுறையில் உள்ள எரிபொருள் அட்டை முறைமையானது எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.
எனவே அதற்கு முன்னதாக "கியூ.ஆர்" குறியீட்டு முறையில் பதிவை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். (ஒ-14-213)

# யாழ். மாவட்டத்தில் நேற்று பரவலாக எரிபொருள் விநியோகத்தில் குழப்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 22
பண்டத்தரிப்பு எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் விநியோகம் நேற்று இடம்பெற்ற வேளை அங்கு சிறிதுநேரம் குழப்பநிலை உருவாகியது என்று தெரிவிக்கப்பட்டது.
எரிபொருள் விநியோக அட்டையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையத்துக்கு மேலதிகமாக ஏதேனும் ஓர் எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் அட்டையைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அறிவித்திருந்தார்.
இந்த நிலையில் பண்டத்தரிப்பு எரிபொருள் நிலையத்துக்கு வந்த சண்டிலிப்பாய் பிரதேசசெயலர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கு மாத்திரமே இங்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். அதனையடுத்தே அங்கு வரிசையில் காத்திருந்த மக்கள் குழப்பத்தை ஏற்படுத்தினர். அதன் பின்னர் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் வரிசையில் காத்திருந்த அனைவருக்கும் உரிய முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.
இதேபோன்று யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களில் குழப்பங்கள் நடைபெற்றன. ஒரு சில பிரதேச செயலர் பிரிவுகளில், அந்தந்தப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மக்களே பெற்றுக் கொள்ள முடியும் என்றும், வேறு சில பிரதேச செயலர் பிரிவுகளில் அந்த நடைமுறை இல்லாமையாலும் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது.
வாகன இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் விநியோகம் நடைபெறும்போது, தமக்குரிய நாளில் தமது எல்லைக்குட்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் எரிபொருள் விநியோகம் இடம்பெறாவிடின் என்ன செய்வது என்றும் மக்கள் கேள்வி எழுப்பினர். (ஒ-14)

## *தன்னிச்சையான...*

நேற்றுக் கருத்து தெரிவிக்கும்போதே இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற கூட்டம் இடம்பெற்றபோது அங்குசென்ற டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் கூட்டமைப்பு எழுத்து மூலம் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. என்னால் அந்த நிகழ்வுக்குப் போகமுடியவில்லை. இந்த விடயம் இரவோடு இரவாக ஊடகங்களுக்கு செய்திகளாகச் சென்றிருக்கின்றன.
ஜனாதிபதி தேர்தல் நடக்கின்ற நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டாக பிளவுபட்டு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் டலஸ் அழகப்பெரும மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாட்டை ஏற்படுத்தியுள்ளனர் என்ற செய்தியை இரவில் தெரியப்படுத்தும் நிலை உருவானது. இது பாரதூரமான நிலைமை. அவ்வாறு உடன்பாடு ஏற்பட்டிருந்தால் அதனை வெற்றி பெற்ற பின்னர் வெளியிட்டிருக்க முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு அது தெரிந்தால் போதுமானது. அதற்கிடையில் அதனை வெளியே கூறியதை ஏற்கமுடியாது. இதன் காரணத்தினாலும் எதிர்பாராத தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கலாம்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இந்தியா நிர்ப்பந்தித்துத்தான், ரணிலுக்கு எதிரான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்ற கருத்து அங்கு பேசப்பட்டு இருக்கின்றதென தகவல் வெளியாகியுள்ளது. அதனுடைய உண்மை எனக்கு தெரியாது. எதுவாக இருந்தாலும் அவ்வாறு இந்தியாவினுடைய பெயரை உச்சரித்து அந்தத் தீர்மானத்தை எடுத்ததை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவை எல்லாம் தந்திரோபாயமற்ற - பொறுப்பற்ற செயல்களாகும்.
எழுபது ஆண்டுகால அனுபவத்தைக் கொண்டுள்ள ஒரு கட்சியாக இருக்கும்போது இவ்வாறான தன்னிச்சையான செயற்பாடுகள் எவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தி இருக்கின்றது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். எமது கருத்தில் நம்பிக்கையில்லை என்று இந்தியாவை இழுத்துப் பேசவேண்டிய சந்தர்ப்பத்தை நினைத்து நான் மிகவும் கவலையடைகின்றேன். இதனால் பெரும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் - என்றார். (அ-ம-26)

## *எரிபொருள்...*

மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றையதினம் பரவலாக எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டது. இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பெற்றோல் விநியோகத்தைப் பொறுத்தவரை இன்று முதல் (நேற்று) தொடர்ச்சியாக எதிர்வரும் 29ஆம் திகதி வரை நாளாந்தம் 15 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. மக்கள் எந்தவித நெருக்கடியையும் ஏற்படுத்தாது அமைதியாக இருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
எனினும், எரிபொருள் விநியோகம் ஆரம்பித்திருக்கின்ற நிலையில் பொதுமக்கள் ஒன்றுகூடி நெருக்கடியை ஏற்படுத்துகின்றனர் என்றும் அதேபோன்று எரிபொருள் பெறுவதற்குரிய விதிமுறை மற்றும் அறிவுறுத்தலை பின்பற்றாமல் நடந்துகொள்கின்றனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆகவே எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் பொதுமக்கள் மற்றும் அரசாங்க அலுவலர்கள் உரிய நடைமுறையைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள் - என்றார். (அ-ம-20-26-17-125)

மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




திருமதி தவமலர் விக்கிரமசந்திரன்
(தபாலதிபர் தரம் I)

சுண்டுக்குளி தபாலகத்தில் தபாலதிபர் தரம் I பணியில் உத்தியோகத்தராக 32 வருடங்கள் கடமையாற்றி நேற்று (21.07.2022) வியாழக்கிழமை ஓய்வு பெறுவதையிட்டு அவரின் சேவையை பாராட்டுவதுடன் இன்று (22.07.2022) பிறந்த நாளை நமது இல்லத்தில் கொண்டாடும் அவரை ஓய்வுக் காலம் மேலும் சிறப்புற நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
கணவர், பிள்ளைகள், டிலக்ஷனா, யதுஷன், மருமக்கள்.
சகோதரர்கள், மைத்துனிகள், உறவினர்கள், நண்பர்கள்
51/3 அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(CS20039) (3/6)

மரண அறிவித்தல்



தோற்றம் : 24 . 10 . 1929 மறைவு : 18 . 07 . 2022

திருமதி. ஞானரத்தினம் - சிவசம்பு
சுன்னாகம் மயிலினி சைவ வித்தியாசாலை ஓய்வு பெற்ற ஆசிரியை

சூராவத்தை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும்,கொண்ட திருமதி. ஞானரத்தினம் - சிவசம்பு 18.7.2022 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற Dr. கனகசபாபதி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.சிவசம்பு அவர்களின் அன்பு மனைவியும், நாகலக்ஷ்மி (பிரான்ஸ்), வள்ளிநாயகி (லண்டன்), சிவகுமார், கிருஷ்ணகுமார், சாவித்ரி, ஆகியோரின் அன்புத் தாயாருமாவார், சுகிர்தரத்தினம், பஞ்சரத்தினம், காலஞ்சென்ற -வர்களான பராசக்தி, சரஸ்வதி, விஜயரட்ணம், பஞ்சாட்சரலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் 23.7.2022 சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல் : சிவகுமார் ( மகன் ) 2581615

மரண அறிவித்தல்



பொன்னையா கதிர்காமநாதன்

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கதிர்காமநாதன் நேற்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னையா இந்திராணி தம்பதியரின் புதல்வனும். காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும். கமலாம்பிகை. மீனாம்பிகை. ஆகியோரின் அன்பு அண்ணனும். குணரட்ணசிங்கம் காலஞ்சென்ற ரஞ்சினிதேவி. ராஜகுமாரி. செல்வராணி. குணபால சிங்கம் ஆகியோரின் தந்தையும் ஸ்ரீராஜினி. நளினி. சுந்தரலிங்கம். பரமேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் டினேஸ். குணேஸ். தாட்சாயினி (சுவிஸ்). அஜித்தன். சஜிவன். கவிப்பிரியன். விதுஷாயினி. டினுசியன். கஜன். கீதன். பானுசன் ஆகியோரின் பேரனும். அக்ஷயா. துஷாரா. கபிஸ். தியானா. ஆதிரா ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2022) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:
குடும்பத்தினர்.
(CS 20053) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org